**செய்தி வெளியீடு எண்: 74** **நாள்:15.05.2021**

**செய்தி வெளியீடு**

**அரபிக் கடலில் உருவாகியுள்ள ‘டவ்–தே (TAUKTAE)’ புயல் சின்னம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது ஆலோசனைக் கூட்டம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (15–5–2021), தலைமைச் செயலகத்தில், அரபிக் கடலில் உருவாகியுள்ள ‘டவ்–தே’ புயல் சின்னம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் திரு. பாலச்சந்திரன், இயக்குநர், இந்திய வானிலை ஆய்வு மையம் அவர்கள் கலந்துகொண்டு, புயல் சின்னம் குறித்த தற்போதைய நிலவரத்தையும், மழை பெய்யவிருக்கிற சாத்தியக்கூறுகளையும் எடுத்துக் கூறினார்.

அரபிக் கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தைத் தொடர்ந்து கன மழை முதல் மிக கன மழை ஏற்படக்கூடிய மாவட்டங்களில், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும், ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் 14–5–2021 காலைக்குள் கரைக்கு திரும்புமாறு ஏற்கெனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த

மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள **244** ஆழ்கடல் மீன்பிடி படகுகளுள், **162** மீன்பிடிப் படகுகள் தற்போது கரைக்குத் திரும்பியுள்ள நிலையில், எஞ்சிய படகுகளும் கரை திரும்ப உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

நிலச்சரிவு ஏற்படக்கூடிய மலை மாவட்டங்களில் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான உபகரணங்களைத் தயார் நிலையில் வைக்கவும் உரிய அறிவுரைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மழையால் பாதிக்கப்படுகிறவர்களை முகாம்களில் தங்க வைக்கும்போது, கொரோனா எச்சரிக்கைகளை மேற்கொள்ளுமாறும், முழு வீச்சில் வருவாய்த் துறையினர் கண்காணிப்புப் பணிகளைச் செய்யுமாறும், அணைகளின் நீர்மட்டங்களைக் கண்காணித்து வரும்படியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோரினார்கள்.

தேசிய பேரிடர் மீட்புப் படையின் நான்கு குழுக்களும் {மதுரை (2), கோயம்புத்தூர் (1) மற்றும் நீலகிரி (1)} மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் குழுக்களும் நிலைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், பாதிப்பு ஏற்படக்கூடிய மாவட்டங்களில்

அக்குழுக்களைக் கொண்டு உடனடியாக நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், முனைவர் திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., தலைமைச் செயலாளர், முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., பொதுத் துறைச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

===============

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**